(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 3(1).]**

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2025 டிசம்பர் 18, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2026 சனவரி 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2026 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ஐந்நூறு பில்லியன் ரூபாயினை (ரூபா 500,000,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைப்பு** | **240** - | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் | | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** - | அபிவிருத்திச் செயற்பாடுகள் | | |
| | | | மீண்டெழும் செலவினம் | ரூ. 150,000,000,000 |
| | | | மூலதனச் செலவினம் | ரூ. 350,000,000,000 |
| | | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 500,000,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 டிசம்பர் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**